ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

छाया तोयं वसतिरशनं वाहनं दीपिका वा
क्रेतुं यस्मिन् किल न सुलभं किञ्चिदप्येषु मर्त्यैः ।
तस्मिन्दूरे पथि तनुभृतां सर्वथैवाभिगम्ये
प्रस्थानार्हं कमपि तु विधिं घस्मरा न स्मरामः ॥

नीलकण्ठदीक्षिताः ॥

மனிதர்கள் சுகமாய் வஸிப்பதற்கு வேண்டிய ஸாதனங்கள் பலவுள. அவையாவன:- நிழல்,ஜலம்,வீடு,சாப்பாடு வாகனம், விளக்கு, முதலியவை. இவைகளில் ஒன்றையாவது பவுனைக்கொடுத்தாலும், எந்த மார்க்கத்தில் அற்பம் கூட ஜனங்களால் அடையமுடியாதோ, அவ்விதமான வெகு தூரமுள்ளதும் மானிடப்பிறவியைப் பெற்றவர்களால் அவசியமாகப் போகவேண்டியதுமான பரலோகமார்க்கத்தில் செல்லவேண்டியதற்கு யோக்கியமான ஸாதனங்களை அற்பங்கூட ஸ்மரிக்காமல் வயிறு வளர்ப்பதிலேயே ஞாபகமாயிருந்து கொண்டு காலத்தை வீண்பண்ணுகிறோம்.

நாம்எப்பொழுதும் வஸிக்கும்நகரத்தையோகிராமத்தையோ விட்டுவேறு ஸ்தலங்களுக்குப் போகிறதாயிருந்தால் அங்கு ஸகல சாமான்களும் கிடைப்பதாயிருந்தாலும் சங்கைகொண்டு 4 தினம் தாமதித்து வரவேண்டியிருந்தால் 1 வாரத்திற்கு வேண்டிய ஸாமான்களும் அதிகமான பணத்தையும் மற்றுமுள்ள செலவுக்காகக் கொண்டுபோகிறோம். இவ்விதம் போகாமலுமிருக்கலாம். ஜன்மாவையடைந்த சகலமானவர்களும் அவச்யம் போகவேண்டிய பரலோகத்திற்கு வேண்டிய ஸாதனங்களை நாம் என்ன சம்பாதித்திருக்கிறோம். ஆயிரக்கணக்கான பவுனைச்செலவிட்டாலும் அங்கு ஒன்றும் கிடைக்காதே. ஆகையால் இந்த ஸமயத்திலேயே அவச்யம் ஆர்ஜனம் செய்யவேண்டிய ஸாதனங்களைச் சற்றும் கவனியாமல் விலங்கினங்களைப்போல் விதிவிலக்கை விட்டு கண்டவைகளையெல்லாம் தின்றும் குடித்தும் இப்பிறவியைப்பயனற்றதாகச் செய்கிறோமே என்று ஒருமஹான் வியஸனப்படுகிறார்.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

வேதாந்தஸாரம்.

(௨௫௯-வது பக்கத்தொடர்ச்சி)

கர்மேந்திரியங்களாவன:—வாக், பாணி, பாதம், பாயூ, உபஸ்தம் எனப் பெயர்பூண்ட இவைகளே.

ஆகாசாதி பூதங்களுடைய பிரிவையடைந்த ரஜோகுணாம்சங்களிலிருந்து வெவ்வேறான கர்மாவால் இவைகள் உண்டாகின்றன. பிராணன், அபானன், வியானன், உதானன், ஸமானன் என்கிற பெயரால் வாயுக்கள் ஐந்தாகும். இவ்வைந்தில் முந்திச் செல்லக்கூடியவனும், மூக்கின் நுனியிலிருப்பவனுமாகிய வாயுவுக்குப் பிராணன் என்று பெயர். அபானனென்பவன் குறுக்காகச் செல்லுகிறவனும், பாயுஸ்தானத்திலிருப்பவனும் (அபான வாயுவிருக்கு மிடத்திலிருப்பவனும்) ஆவான். சரீரத்தினுள் பல பக்கங்களிலும் சஞ்சரிப்பவனும், எங்குமிருப்பவனுமான வாயு வியானன் என்று சொல்லப்படுகிறான். உதானன் என்றால் கண்டஸ்தானத்திலிருப்பவனும் உயரக்கிளம்பும் சக்தி பொருந்தியவனுமாகிய உத்கிரமண வாயுவிற்குப்பெயர். பிராணிகளால் புசிக்கப்பட்ட சரீரமத்தியை யடைந்திருக்கும் சகலமான ஆகாரங்களையும் சரியாய் நிரவிவிடுகிறவனுக்கு ஸமானன் என்று பெயர். இவ்விடத்தில் சிலர் நாகன், கூர்மன், கிருகலன், தேவதத்தன், தனஞ்செயன், என்று பெயர்கொண்ட வெவ்வேறான ஐந்து வாயுக்களுண்டென்றும், அவைகளில் ஏப்பத்தை யுண்டுபண்ணுகிறவன் நாகன் என்றும், நித்திரையில்லாமல் செய்கிறவன் கூர்மன் என்றும், தும்மலையுண்டுபண்ணுகிறவன் கிருகலன் என்றும், சோம்பலால் கொட்டாவியை யுண்டுபண்ணுகிறவன் தேவதத்தன் என்

றும், சரீரத்திற்கு ரக்ஷணையைச் செய்கிறவன் தனஞ்செயன் என்றும், கூறுகின்றார்கள். இவைகளும் கீழ்க்கூறிய பிராணன்களில் அடங்கியிருப்பதால் அந்த ஐந்தைத்தவிர அதிகமாக வேறு ஐந்தை அங்கீகரிக்க வேண்டியதில்லை என்றும் மற்றும் சிலர் "பிராணன் முதலான இந்த ஐந்து வாயுக்களும் ஆகாசாதி பூதங்களுடைய ஒன்றாகச்சேர்ந்த ரஜோகுணங்களுடைய அம்சத்தினின்றும் உண்டாகின்றன. கர்மேந்திரியங்களோடுகூடிய இந்தப் பிராணாதிகளான ஐந்து வாயுக்களும் பிராணமய கோசமாகக்கருதப்படுகின்றது; இது கிரியாரூபமாயிருப்பதால் ரஜோகுணத்தின் கார்யமாகின்றது; இங்கே சொல்லப்பட்ட கோசங்களின் மத்தியில் விக்ஞானமயகோசமானது ஞானசக்தியை யுடையதாகவும் கர்த்ருரூபமாகவும் கூறப்படுகின்றது; மனோமயகோசமானது இச்சாசக்தியை யுடையதாகவும், காரணரூபமாகவும் ஆகின்றது; பிராணமயகோசமானது கிரியாசக்தியை யுடையதாகவும் கார்யரூபமாகவும் கருதப்படுகின்றது; அந்தந்த கோசத்தின் யோக்கியதையையனுசரித்து இவ்விதம் விபாகம் செய்யப்பட்டிருக்கின்றது" என்றும் அபிப்பிராயப்படுகின்றார்கள். இந்த மூன்று கோசங்களும் சேர்ந்து ஆத்மாவுக்கு ஸூக்ஷ்ம சரீரம்என்று வியவகரிக்கப்படுகின்றது.

இதே அபிப்பிராயத்தை

कोशत्रयं मिलित्वैतद्वपुःस्यात्सूक्ष्ममात्मनः ।

என்கிற இதனால் ஒருமஹானும் அறிவிக்கிறார்.

இங்கும் சகலமான ஸூக்ஷ்ம சரீரங்களும் வனம், ஸமுத்திரம் என்று முன் காட்டியதுபோல் ஒன்றாகப்புத்திக்கு விஷயமானால் ஸமஷ்டியாகும். அஃதாவது வியாபகமாகும். வெவ்வேறாகப்புத்திக்கு விஷயமானால் மரம், ஜலம், இவைகளைப்போல வியஷ்டியாக (அஃதாவது பரிசின்னமாக) ஆகும்.

இந்த ஸமஷ்டி ஸூக்ஷ்ம சரீரோபஹிதமான சைதன்யமானது ஸூத்ராத்மா என்றும், ஹிரண்யகர்ப்பரென்றும், பிராணன் என்றும் சொல்லப்படுகிறது.

हिरण्यगर्भस्सूत्रात्मा प्राण इत्यपि पण्डिताः ।
हिरण्मये भूतिगर्भे प्रचकास्ति हिरण्यवत् ।
हिरण्यगर्भ इत्यस्य व्यपदेशस्ततो मतः ॥

ஸமஷ்டி ஸூக்ஷ்மசரீராபிமானியான சைதன்யத்தை ஹிரண்ய கர்ப்பன் என்றும், ஸூத்ராத்மா என்றும், பிராணன் என்றும் பண்டிதர்கள் வியவகாரம் செய்கிறார்கள். ஸுவர்ணமானது சாளக்கிராமம் முதலியவைகளில் உள்ளிருப்பதுபோல் இவரும் ஸுவர்ணமயமான புத்தியின் மத்தியிலிருப்பதால் ஸுவர்ணம் போல் இவரும் ஹிரண்யகர்ப்பர் என்கிறபெயரால் விளங்குகிறார்.

(தொடரும்)

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

சண்டாளஜாதி தத்வ நிரூபணம்.

श्रीगुरुभ्यो नमः ॥

चण्डालाख्या लसति भुवने यात्र जातिः प्रसिद्धा
लोकैश्शास्त्रैरपि सुविदिता रूढमूला चिराय ।
तादृग्जातिर्न भवति पृथक्छूद्रजातेरिति स्वं
निर्मूलं हा मतमिति वृथा केचिदाचक्षतेऽद्य ॥

இவ்வுலகில் சாஸ்திரங்களாலும் ஜனங்களாலும் நன்கறியப் பட்டதாயும், வெகுகாலமாய் அனுஷ்டானத்திலும் நடைபெற்று வருகிறதுமான யாதொரு ஜாதியானது சண்டாளனென்கிற பெய ருடன் பிரசித்தமாய் விளங்கிவருகின்றதோ அந்த ஜாதியை சூத் திர ஜாதியின் ஓர்விதப் பிரிவென்றும், சூத்திரர்களைக் காட்டிலும் வேறான சண்டாளனென்று ஓர் ஜாதி கிடையாதென்றும் சிலர்

யாதொரு பிரமாணமுமில்லாமல் தம் சொந்த அபிப்பிராயத்தை மாத்திரம்கொண்டு வீணில் பெருங் கூச்சலிடுகிறார்கள். அந்தோ!

सच्छास्त्रयुक्तिभिरहं प्रतिपाद्य तेषा-
मेषा न दोषसहिता फणितिर्वरेति ।
मन्वादिभिः प्रकटितं निगमार्थसार-
सिद्धान्तमद्य कथये जनताहिताय ॥

சாஸ்திரங்களாலும் அவைகளுக்கு விரோதமில்லாத யுக்திகளாலும் சண்டாள ஜாதி இல்லை என்கிற சிலருடைய தோஷத்தோடு கூடிய வசனத்தைச் சரியல்லவென்று நிரூபித்து மனு முதலான மஹரிஷிகளால் பிரசித்தி பண்ணப்பட்ட வேதார்த்தங்களின் ஸாரபூதமான ஸித்தாந்தத்தை ஜனங்களின் ஹிதத்தை யுத்தேசித்து நான் வெளியிட முன்வருகிறேன்.

தற்காலம் ராஜீய முன்னேற்றத்திற்கு மிக்க அவசியமென்று "மஹாத்மா" காந்தி அவர்களால் கருதப்படும் தீண்டாமை ஒழித்தல் என்ற விஷயத்தைப்பற்றி நாம்ஹிந்துக்கள் இன்னும் போதுமானபடி விசாரிக்க ஆரம்பிக்கவில்லை. கீழ் ஜாதிக்காரர்களை மேல் ஜாதியார் மரியாதையாய் அபிமானத்துடன் நடத்திவரவேண்டுமென்று மாத்திரம் காந்தியவர்கள் சமீபகாலம்வரை சொல்லிவந்தார்கள். அவ்விஷயத்தில் எந்த ஹிந்துவுக்கும் ஆக்ஷேபணை இருக்கக்கூடியதில்லை. ஆனால் கொஞ்சகாலமாய் பல காரணங்களினால் தன்னிடம் ஜனங்களுக்கு ஏற்பட்டிருக்கும் விசுவாஸத்தினால் தைரியங்கொண்டு தீண்டாமையைப்பற்றி சாஸ்திர விஷயமாகவும் பேசத்துணிந்துவிட்டார். தான் ஹிந்துமதத்தைப் பற்றி அதிகமாய் வாசித்தது கிடையாதென்றும் தனக்கிருக்கும் அல்ப ஞானமும் மொழிபெயர்ப்புகள் மூலமாய்தான் ஏற்பட்டிருக்கிறதென்றும் அவர் ஒப்புக்கொண்டு வெகுநாள் ஆகவில்லை. இப்பொழுதோவெனில் தான் "ஸநாதனி ஹிந்து" என்றும் தீண்டாமையைப்பற்றி சாஸ்திரங்களில் எவ்வித ஆதாரமும் கிடையாதென்றும் உத்கோஷிக்க ஆரம்பித்துவிட்டார். அவர் எந்தமட்

டில் "ஸநாதனி ஹிந்து" என்றும் அவருடைய நோக்கப்படி "ஸநாதன மதம்" என்றால் என்ன என்றும் விசாரிக்கவேண்டிய விஷயம் வேறு. இருந்தாலும் அவரை "ஸநாதனி ஹிந்து" என்று ஒப்புக்கொண்டாலுமே தான் சொல்வது சரிதானா என்றுகூட விசாரித்துக் கொள்ளாமல் இவ்வளவு தைரியமாய் இவ்வளவு பெருமை வாய்ந்தவர் சொல்லத் தலைப்பட்டால் கலியின் வலிமையைத் தவிர வேறு என்னகாரணம் சொல்லமுடியும். ஒரு தர்ம சாஸ்திர புஸ்தகத்தையேனும் திருப்பிப்பாராமல் அவைகளில் இல்லையென்று மாத்திரம் சொல்ல எப்படி தைரியம்வந்ததோ தெரியவில்லை. கீழ்ஜாதியார்களுக்கு வேண்டிய லௌகிக சௌகரியங்கள் செய்துகொடுத்து அவர்கள் சாப்பாட்டுக்குத் திண்டாடாமல் செய்யவும், அவர்களிடமிருக்கும் குடிமுதலிய துராசாரங்களை நிவர்த்திக்கவும் பிரயத்தினம் செய்யவேண்டுமென்று அவர் சொன்னால் எல்லா ஹிந்துக்களுமே அவருடன் ஒற்று வேலை செய்ய சம்மதிப்பார்கள். அதன்னியில் பிராசீன ஸ்மிருதிகர்த்தர்களான மனு, யாக்ஞ்யவல்க்யர், பராசரர் முதலியோர்களின்கோஷ்டியில் தன்னையும் சேர்த்துக்கொண்டு தான் சொல்லும் வார்த்தைகளையும் பிரமாணமாய் அங்கீகரிக்கவேண்டுமென்று அவர் கேட்க ஆரம்பித்திருக்கிறார். அவரிடம் தற்காலம் சிலர்களுக்கிருக்கும் மோஹத்தின் பலத்தினால் அவர்கள் உள்பட்டாலும் படலாம். சாதாரணஜனங்கள் உள்படமாட்டார்களென்பதில்சந்தேகமில்லை. இருந்தாலும் தற்காலம் சாஸ்திரபிரக்ஞையுள்ளவர்கள் மிகக்குறைவாயும், சாஸ்திர பிரக்ஞை ஆடோபம் மிக ஜாஸ்தியாகவும் இருப்பதால் காந்தியவர்கள் சொல்கிறபடி சாஸ்திரங்களில் தீண்டாமை விஷயமான வசனங்கள் கிடையாதோவென்று சாமானிய ஜனங்கள் சந்தேகிக்கக்கூடியது சகஜமாயிருப்பதால் அவர்களுக்கு இருக்கும் சந்தேகத்தைப்போக்கி சாஸ்திரங்களின் உண்மையை அறிவிக்கவேண்டி அவ்வசனங்களில் சிலவற்றை எடுத்து எழுதலாமென்று உத்தேசிக்கிறேன்.

தற்காலம் ஆஸ்திகர்களில்கூட சிலர்கள் நம்மதத்தில் "சாதுர்வர்ண்யம்" என்று சொல்வதால் நாலு ஜாதிகளுக்குமேல் கிடை

யாதென்றும் பஞ்சமர்களென்று சொல்லப்படும் ஜாதிகளும் இந்த நான்கு ஜாதிகளுக்குள் அந்தர்பாவமடைய வேண்டுமென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். அவ்வபிப்பிராயத்திற்கும் சாஸ்திர பர்யாலோசனையின்மையே காரணம். பொதுவாக சாதுர்வர்ண்யமாகத்தான் ஹிந்துஜன ஸமூஹம் ஏற்பட்டிருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. ஆனால் முன் யுகங்களில் பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்களில் மேல்ஜாதியார் கீழ்ஜாதிப் பெண்களை விவாஹம் செய்துகொள்ளலாமென்று சாஸ்திரத்தில் அனுமதியிருந்தபடியாலும், சாஸ்திர அனுமதியை எதிர்பாராமலே காமப் பிரவிருத்தி இருக்கக்கூடியதாலும் ஸங்கர ஜாதிகள் ஏற்பட்டே தீருமென்பதை நன்கு உணர்ந்து அவர்களுக்கும் சாதுர்வர்ண்ய ஏற்பாட்டில் ஸ்தானங்கள் தீர்மானம்செய்து அவர்களுக்குறிய தர்மங்களையும் சாஸ்திரங்களே விதித்திருக்கின்றன. அனுமதிக்கப் பட்ட சம்பந்தங்களால் ஏற்படும் பிரஜைகளுக்கு அனுலோமர்கள் என்றும் விபரீதர்களுக்கு பிரதிலோமர்கள் என்றும் பெயர். ஸமான ஜாதியார்களுக்குள் விவாஹமானால் பிறக்கும் பிரஜைகளுக்கு ஸஜாதீயர் என்றே சொல்லப்படும். இவ்விதமாக ஸஜாதீயர் நான்கு :—

1.	பிராஹ்மணன்	(பிராஹ்மண தகப்பன்,	பிராஹ்மண தாயார்)	
2.	க்ஷத்திரியன்	(க்ஷத்திரிய	,,	க்ஷத்திரிய	,,
3.	வைசியன்	(வைசிய	,,	வைசிய	,,
4.	சூத்திரன்	(சூத்திர	,,	சூத்திர	,,

அனுலோமர்கள் ஆறு :—

1.	மூர்த்தாவஸிக்தன்	(பிராஹ்மண	தகப்பன்,	க்ஷத்திரிய	தாயார்)
2.	அம்பஷ்டன்	(,,	,,	வைசிய	,,
3.	நிஷாதன்	(,,	,,	சூத்திர	,,
4.	மாஹிஷ்யன்	(க்ஷத்திரிய	,,	வைசிய	,,
5.	உக்கிரன்	(,,	,,	சூத்திர	,,
6.	கரணன்	(வைசிய	,,	,,	,,

பிரதிலோமர்களும் ஆறு :—

1.	ஸூதன்	(க்ஷத்திரிய தகப்பன்,	பிராஹ்மண தாயார்)
2.	வைதேஹன்	(வைசிய ,,	,, ,,
3.	மாகதன்	(,, ,,	க்ஷத்திரிய ,,
4.	ஆயோகவன்	(சூத்திர ,,	வைசிய ,,
5.	க்ஷத்தா	(,, ,,	க்ஷத்திரிய ,,
6.	சண்டாளன்	(,, ,,	பிராஹ்மண ,,

மேல்கண்ட மூன்றுவித வகுப்புகளுக்குள் தாரதம்யத்தைச் சொல்லுங்கால் தேவல மஹரிஷி விதிப்பதாவது:—

तेषां सवर्णजाः श्रेष्ठाः तेभ्योऽन्वगनुलोमजाः ।
अन्तराला बहिर्वर्णाः पतिताः प्रतिलोमजाः ॥

"அவர்களுள் ஸமானஜாதி சம்பந்தத்தால் ஏற்பட்டவர்கள் சிரேஷ்டர்கள். அவர்களுக்கு அடுத்தபடி அனுலோமஜர்கள். ஸங்கரஜாதிகளில் பிரதிலோமஜர்கள் நான்கு வர்ணங்களில் சேராமல் பதிதர்களாவார்கள்."

அப்படியே யாக்ஞ்யவல்க்ய முனிவரும் சொல்கிறார்:—

असत्सन्तस्तु विज्ञेयाः प्रतिलोमानुलोमजाः ॥

"பிரதிலோமர்கள் கெட்ட ஜாதியார்களென்றும், அனுலோமர்கள் நல்ல ஜாதியார்களென்றும் அரியவும்."

மேல்கண்ட ஜாதிகளை பரிசீலனம் பண்ணும்பொழுது நிஷித்த சம்பந்தத்தால் ஏற்பட்ட பிரஜைகளான பிரதிலோமஜர்கள் வர்ணதர்மத்திற்கு உள்படாதவர்களென்று நன்றாய் விளங்கும். அனுலோமஜர்களில் மூர்த்தாவஸிக்தன், அம்பஷ்டன், மாஹிஷ்யன் இம்மூன்று பேர்களுக்கும் பெற்றோரிருவரும் த்விஜர்களாயிருப்பதால் அவர்களுக்கு தங்கள் தங்கள் தாயார் ஜாதியின் கௌரவத்தைப்பெற்று அவர்களும் த்விஜர் என்றே எண்ணப்படுகிறார்கள். மற்றும் மூன்று அனுலோமர்களுக்கு தகப்பனார் த்விஜனாயிருந்தபோதிலும் தாயார் த்விஜவகுப்பில் சேராததினால் அவர்கள் த்விஜராகமாட்டார்கள். அவ்விதமே பிரதிலோமஜர்கள்

வர்ணதர்மத்திற்கு உள்படாமலிருந்தபோதிலும் அவர்களுக்குள் ஸூதன், வைதேஹன், மாகதன் இம்மூவர்களுடைய பெற்றோரும் திவிஜராயிருப்பதால் சூத்திரத் தகப்பனுக்குப் பிறந்த மற்ற மூன்று பிரதிலோமஜர்களைவிட மேல்ஜாதி யென்று சொல்லப் படுகிறார்கள்.

प्रतिलोमास्तु धर्महीनः । शूद्रायां च । असमानायां च शूद्रात् पतितवृत्तिः । अन्त्यः पापिष्ठः ।

"பிரதிலோமமாயிருப்பதால் தர்மஹீனர்கள். அவ்விதமே சூத்திர ஸ்திரீயிடம் பிறந்தவர்களும். சூத்திர தகப்பனுக்கும் மேல்ஜாதி தாயாருக்கும் பிறந்தால் பதிதனாவான். அவர்களுள் கடைசி (சண்டாளன்) மிகவும் பாபமுள்ளவன்" என்று கௌதமர் ஸூத்திரம். இவ்விடத்தில் "தர்மஹீனர்கள்" என்ற பதத்தில் "தர்மம்" என்பது உபநயனம் முதலான விசேஷ தர்மத்தைக் குறிக்குமேயல்லாமல், சாமான்னிய தர்மத்தைக் குறிக்காது. அஹிம்ஸை, ஸத்தியம் முதலிய சாதாரண தர்மங்கள் மனுஷிய சாமான்யத்திற்கு உண்டு.

தீண்டாமை என்ற அஸ்பிருச்ய தோஷமானது மேல்கண்ட பிரதிலோமஜர்களில் கடைசி மூன்று, அதாவது, சூத்திரத் தகப்பனுக்கு மேல்ஜாதி ஸ்திரீகளிடத்தில் பிறந்த ஜாதியார்களுக்குமாத்திரம்தான் உண்டு. அவர்களைத்தான் கௌதமரும் "பதிதர்" என்று சொன்னார். கடைசி (**अन्त्य** அந்த்ய) வர்ணமான சூத்திரனுக்கு பிறந்தமையால் அந்த ஜாதியார்களுக்கு **अन्त्यज** அந்த்யஜர் என்றும் பெயருண்டு. இவ்வந்த்யஜர் இதர ஜாதியார்களுடன் சம்பந்தப்பட்டு பிறக்கும் பிரஜைகளுக்கும் அந்த்யஜர் என்றே சொல்லலாம். அந்த்யஜர்களுக்குள் சண்டாளன் பாபிஷ்டன் யென்று சொல்லப்பட்டமையால் சாதாரண அந்த்யஜர்களைவிட சண்டாளன் விஷயமாய் ஜாஸ்தி கடுமையான விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

சுருதியில் தீண்டாத ஜாதி என்று ஒரு ஜாதிப்பெயர் இருப்பதாகக்கூடச் சொல்லப்படவில்லை என்று பிரசித்திபெற்ற பலர்

பப்ளிக் மீட்டிங்கில்கூட தைரியமாய் பேசுகிறார்கள். அவர்கள் வார்த்தை எவ்வளவுவரையில் உண்மை என்பதை முந்தி விசாரித்துப் பிறகு இதர பிரமாணங்களையும் கவனிப்போம்.

பிருஹதாரண்யகம் நாலாவது அத்யாயம் மூன்றாவது பிராமணம் 22-வது மந்திரபாஷ்யத்தில் ஸுஷுப்தி அவஸ்தையில் சகல தர்மங்களும் விலகிவிடுகின்றன என்று கூறிவரும் பிரகரணத்தில் ஸுஷுப்தி அவஸ்தையில் சண்டாளன், அசாண்டாளன், புல்கஸன், அபுல்கஸன் என்று ஸ்பஷ்டமாயிருக்கின்றது. சண்டாளனும், புல்கஸனும் அப்படி இல்லாதவனாகிறான் யென்கிற கருத்துக்கொண்ட இந்த சுருதி வாக்கியத்தின் அவதாரிகா பாஷ்யத்தில் தற்காலத்திலுண்டாகும் கர்மத்தால் மாத்திரம் விடுபடுவானென்பதில்லை. ஆனால் வேறென்னவெனில் மிகவும் தாழ்ந்த ஜாதியை அடைவிக்கும் இயற்கையான கர்மத்தாலும் விடுபட்டவன்தான் இவன் என்றுகூறி பிறகு சண்டாளனென்பவன் பிராமணஜாதி ஸ்திரீயினிடத்தில் சூத்திரஜாதி புருஷனுக்கு உண்டானவன் என்றதினால் சண்டாளன் மிகவும் தாழ்ந்த ஜாதி என்று வியாக்யானம் செய்யப்பட்டிருக்கிறது. இதனால் சண்டாளன் என்று ஒருஜாதி உண்டென்றும் அவன் மிகவும் தாழ்ந்த ஜாதி என்றும் நன்கு வெளியாகவில்லையா?

இதுமாத்திரமல்ல. தைத்திரீயப்பிராமணம் 3-வது அஷ்டகம், 4-வது பிரச்னம், 14, 17-வது அனுவாகத்தில் சாண்டாளனென்றும், பௌல்கஸனென்றும் பதங்கள் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றன. பின்னும் ஸ்ரீ ருத்திரத்தில் 4-வது அனுவாகம் 8வது மந்திரத்தில் ஈச்வரனுக்கு ஸர்வாத்மகத்வத்தைக் கூறுமிடத்தில், நிஷாதரூபரென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. நிஷாத என்கிற அந்தப் பதத்திற்குப் பரமஹம்ஸபரிவிராஜகஸார்வபௌம ஸ்ரீமத் பிரவ சங்காசார்யாவர்கள் பாஷ்யத்தில் சண்டாளன் யென்கிற பொருளை வெளியிட்டிருக்கிறார்கள். இவ்விதம் சுருதியில் பலவிடங்களில் சண்டாளபதப் பிரயோகம் ஸ்பஷ்டமாயிருக்க இந்த வார்த்தையே சுருதியில் கிடையாதென்று ஸதஸ்ஸில் தைரியமாகக்கூறி சாமானிய ஜனங்களை வஞ்சிப்பது எவ்வளவு ஸாஹஸமான காரியம்.

இனி அவன் அசுத்தனென்று சொல்வதற்கு ஆதாரமான சுருதியையும் வெளியிடுகிறோம்.

சாந்தோக்கிய உபநிஷத்தில், ஐந்தாவது அத்தியாயத்தில் அக்கினிஹோத்திரம் முதலிய புண்யகர்மங்களின் பயனை அனுபவிக்க சுவர்க்கலோகம் சென்றவர்கள் அங்கு அனுபவிக்கக்கூடிய பயனை அனுபவித்து பிறகு இவ்வுலகத்திற்குத் திரும்புகிறார்கள். அவர்களுக்குள் எவர்களுக்கு பாபகர்மங்கள் பலாபிமுகமாக (அதாவது பலனையளிக்கும் கிரமைவாய்ந்தனவாக) இருக்கின்றனவோ அவர்கள் தாழ்ந்த யோனியிற் பிறக்கின்றார்கள் என்றும், அதிலும் நாய் ஜாதியிலாகிலும், பன்றி ஜாதியிலாகிலும், சண்டாள ஜாதியிலாகிலும் ஜனிக்கிறார்கள் என்றும் சுருதி ஸ்பஷ்டமாய்க் கூறுகின்றது. இங்கு வெளியிடப்பட்ட சுருதிகளாலும் அவைகளின் பாஷ்யங்களாலும் சண்டாளன் என்று ஓர் ஜாதி உண்டென்றும் அது கீழான ஜாதி என்றும் நன்கு நிரூபிக்கப்பட்டிருப்பினும் இதைச் சற்றும் கவனியாமலும், பிறர் கவனிப்பார்களே என்கிற எண்ணமில்லாமலும் சுருதியில் சண்டாளன் என்கிற பதமே கிடையாதென்று தம் வாக்கையே சுருதியாகக் கருதிய சிலர் ஸபைகளிலும், பத்திரிகைகளிலும் எங்ஙனம் பறையறையத் துணிகிறார்களோ தெரியவில்லை. அந்தோ !

(தொடரும்)

R. கிருஷ்ணஸாமி அய்யர் எம்.ஏ. ஸி.எல்,
ஹைகோர்ட்டு வக்கீல்.

கர்வம் படைக்கலாகுமா ?

கர்வம் என்பது தற்புகழ் எனப்படும். அதுவே கீர்வாண பாஷையில் ஆத்மச்லாகை எனவும்படும். நான்என்கிற மமதையையடைந்து பெரியோர்களை அவமதித்தல் அவர்கள் சொல்படி நடக்காமல் ஹிதத்தை உபதேசிக்கும் அப்பெரியோர்களை அஹிதர்களாக எண்ணித் தன்னையே ஸர்வக்ஞன் என்று நினைத்து மனம் சென்றபடி ஹிதாஹிதங்களைப் பகுத்தறியாது ஸ்வேச்சாமார்கத்

தில் செல்வதுதான் கர்வம் என்கிற பதத்தின் பொருளாம். எவர்களுக்குக் கீழ்ச்சொன்ன கர்வம் என்பது இருந்துவருகின்றதோ அவர்கள் மேலோங்குவது காட்டுத்தியினால் பஸ்மமாகச் செய்யப்பட்ட தருவினது செழுப்புப்போல் கூறப்படும். இதற்கு த்ருஷ்டாந்தமாக ஈங்கு ஓர் உபாக்யானம் கூறுவோம்.

தேவலோகத்தில் ஸர்வ வைபவங்களும் அடங்கிய அமராவதி என்னும் பெயர்பெற்ற நகரம் ஒன்று இருக்கிறது. அந்நகரத்தையாளும் அரசனுக்கு இந்திரன் என்று பெயர். அவ்வரசனுக்கே விருத்ரஹாவென்னும் வேறொரு நாமமும் உண்டு.

அவன் ஒருநாள் காலைவேளையில் ஸ்துதிபாடகர்களால் மெச்சத்தகுந்த உத்தம வாத்யகோஷங்களாலும் அர்த்தம் பொருந்திய துதிகளாலும் எழுப்பப்பட்டு தூங்கிவிழித்துக்கொண்டதும் கண்ணாடி, சந்தனம், ஸுவர்ணம், மிருதங்கம், அக்னி, சூர்யன் இவைகளைத் தரிசித்தல் வேண்டும் என்கிற சாஸ்திரவசனத்தின்படி தனக்கு எதிரிலிருக்கும் இந்திராணியின் கபோலமாகிய கண்ணாடியைப் பார்த்து அருகிலுள்ள காமதேனுவையும் பூஜித்து புராண புருஷனாகிய கமலாக்ஷனது சரண ஸ்பரிசத்தினால் உலகம் எங்கும் பரிசுத்தம் செய்யக்கூடிய ஸுவர்நதீ என்னும் மொழிபெற்ற கங்காதீரத்தை யடைந்து அகமர்ஷண ஸூக்தம் அஃதாவது பாபங்களை விலக்கக்கூடிய மந்திரமென வழங்கப்படும் ஸூக்தத்தினால் ஸ்நானம் செய்து அந்நதீமணலில் ஹ்ருதயாகாசத்தில் பூஜிக்கப்பட்ட திவ்ய லிங்காகாரமான சிவலிங்கத்தை ப்ரதிஷ்டை செய்துபகவான் மதனாந்தகனை கங்காதி தீர்த்தங்களால் அபிஷேகம்செய்து கஸ்தூரி முதலிய வாஸனாத்ரவியங்களுடன் சேர்க்கப்பட்ட சந்தனத்தினாலலங்கரித்து திவ்ய புஷ்பங்களால் அர்ச்சித்து தூபதீபங்களாலுபசரித்து அன்று கொண்டுவரப்பட்ட திவ்ய அமுதத்தை நிவேதனம்செய்து ப்ரதக்ஷிணவந்தனாதிகளைமுடித்து சுருதிசிரஸ்ஸுகளால் ஸ்துதித்து விஸர்ஜனம் செய்து பிறகு தன் ஹ்ருதயகமலத்தில் அநாதியான பரப்ரம்ம ஸ்வரூபத்தை அநுஸந்தானம்செய்து அந்நதீ தீரத்தைவிட்டு வெளிக்கிளம்பி எதிரில் நிற்கும் சேனாமுகத்தைக்கண்டு பார்வையினாலேயே அரசனது

அபிப்ராயத்தையறிந்த வேலைக்காரர்களால் கொண்டுவரப்பட்ட ஆகாயத்தை அளாவி நிற்கக்கூடிய கஜத்தின்மீதேரி ரம்பை மேனகை முதலிய அப்ஸரயுவதிகளால் பின்தொடரப்பட்டு ஆகாயமார்க்கத்தில் வருகையில் கௌபீனதாரியாயும் இவரது பிரார்த்தனமாத்திரத்தினுல் சாபத்தில் பயந்த ஓர் வித்யாதர கன்னிகையால் விநயத்துடன் அற்பணம் செய்யப்பட்ட அழகிய ஓர் மாலையை எடுத்துக்கொண்டு வருகின்றதுர்வாஸமகரிஷியைக் கண்டு அவரது மாகாத்மியத்தை நன்கு இந்திரன் அறிந்தவனுக இருந்தும் மூவுலகின் ஆதிபத்யத்தினுல் கர்வம் கொண்டு அவ்வரசன் வாஹனத்தின்மீதிருந்து கீழ் இரங்கவில்லை. அவரை ப்ரத்யுத்தானம் முதலியவைகளாலும் உபசரிக்கவில்லை. பிறகு அம்முனிச்ரேஷ்டரால் கொடுக்கப்பட்ட ஸாக்ஷாத் பரதேவதையான அம்பிகையின் பிரஸாதரூபமான மாலையை அலக்ஷ்யமாய் இடதுகையால் வாங்கிக்கொண்டதுமன்னியில் அவரது நேரிலேயே கண்ணில் ஒத்திக்கொள்ளாமலும் சிரஸில் சூட்டிக்கொள்ளாமலும் தன்வாகனமாகிய கஜத்தின் தலையில் வைத்தான். உடனே கஜம் தன் துதிக்கையால் இழுத்து பாதத்தினுல் அம்மாலையைக் கசக்கி தேய்த்து விட்டது.

பிறகு கோபம்கொண்ட அம்முனிவர் தேவேந்திரனை சபித்தார். சாபத்தின்விபாமாவது, எந்தமூவ்வுலகின் ஆதிபத்யத்தினுல் கர்வம் கொண்டு, வந்த மகரிஷியை அவமதித்தாயோ அம்மூவுலகின் ஆதிபத்யமானது இன்றுமுதல் உன்வைரியையடைந்துவிடட்டும் எனச்சொல்லி திரும்பிச் சென்றுவிட்டார். அன்று முதல் இவ்வரசன் தன் ராஜ்யத்தை இழந்து அஸுரர்களுடன் போர்புரிந்து மிக்க துன்பமடைந்தான். இதற்குக் காரணம் கர்வமே எனப்படும். ஆகவே ப்ரேக்ஷகர்களே! நீங்கள் இச்சிறு வ்யாஸத்தினுல் அடையும் பயன்யாது எனில் பெரியோர்களைக் கண்டால் தான் அமர்ந்திருக்கும் ஆஸனத்தை விட்டெழுந்து வந்த பெரியோர்களை அர்க்யம் பாத்யம் கனி இவைகளால் உபசரித்துப் பிறகு அவர்களின் ஆகமன விருத்தாந்தத்தையும் கேழ்க்க உரிமையுள்ளவர்களாக இருக்கவேண்டும். இங்ஙனம் உபச

ரிக்காதவர்கள் அணிமாதி அஷ்டஐச்வர்யங்களுக்கு அதிபதியாக விருந்தாலும் கீழ்ச்சொன்ன தேவேந்திரனைப்போல் தம்முடைய நாடுநகரம் முதலியவைகளை இழப்பதுமன்னியில் தம்மையும் பெரியோர்களின் சாபத்திற்கு ஆதீனமாகச் செய்துக் கொள்ளுகிறார்கள். ஆகவே பெரியோர்களை உபசரித்தல் அவச்யம் வேண்டும். கர்வம் படைக்கலாகாது என்கிறதை இச்சிறிய வ்யாஸத்தினால் அமாகலாவிலாஸினி ஸபையில் ஸம்ஸ்கிருத கக்ஷியில் சேர்ந்து கற்றுணரும் வித்யார்த்தியால் வெளியிடப்பட்டது.

வித்யார்த்தி, ராமநாதன்.

காஞ்சீபுரத்தில் ஆசார்ய ஜயந்தீ.

ஆரியர்களே? இவ்வருஷம் எங்கும் முன்போலல்லாது பக்தியுடன் புதிது புதிதாய் ஆசார்யஜயந்தீ. மகோத்ஸவம் நடைப்பெற்றதாய்ப் பத்திரிகைகளின் வாயிலாய் அறிந்த ஆஸ்திகர்யாவரும் மனம் களித்திருப்பார்களென்பதோர் புறமிருக்கட்டும், அவைகளின் ஒவ்வொன்றின் விசேஷங்களும் பத்திரிகை மூலமாயும், வெளியிடப்பட்டனவாயினும், காஞ்சீமகாக்ஷேத்திரத்தில் நடந்தேறிய ஜயந்தீவைபவத்தைப்பற்றி இதுகாறும் எடுத்துக் கூறுநிருந்தது ஒருபுறம் குறைதானாயினும் எனது பாக்கியவசத்தால் வெளிப்படவில்லையென்பதைப்பற்றி நான் பெருமைப்பாராட்டிக்கொண்டு அங்கு நிகழ்ந்தவைபவத்தை என் சிற்றறிவுக்கெட்டியவரை வெளியிடுகிறேன்.

இனி இங்கு இக்காஞ்சீமகாக்ஷேத்திரமென்பது மூவுலகில் நடுநாயகம் போன்றதென்பதை யாவருமறிவார். இம்மகாக்ஷேத்திரத்தில்தான் ஸமஸ்தஸித்தியும் உலகிற்கேற்படு மென்பதையே சாஸ்திரக்காரர்கள் முறையிடுகின்றனர். இந்த திவ்ய க்ஷேத்திரத்திலும் இதன் சுற்றுப்புறம் இதன் எல்லைக்குட்பட்ட விடங்களில் அநேக அரியக்ஷேத்திரங்களுள. இப்பிரதேசங்களில் அநேக

மகனீயர்கள் அவதரித்து விளங்கினர். இத்தகைய எண்ணமுடியாவைபம்கொண்டு தேவதாவாஸபூமியான இந்த க்ஷேத்திரத்தில்தான் காலடியில் அவதாரம் செய்தவர்களும், ஸமஸ்ததுன்மதங்களை வேறறக்களைந்து இந்தியாவென்னும் பரதகண்டத்தைச் செழிக்கச் செய்தவர்களும் இங்கு ஸர்வக்ஞபீடாதிரோகணம் செய்தவர்களுமான நமது அத்வைத பரமாசார்யாரவர்கள் காமகோடிஎன்னும் ஸ்ரீசக்கிரப்பிரதிஷ்டாபனம்செய்து அங்குகாமாக்ஷீ தேவியின் ஸான்னித்தியத்தை ஸ்தாபனம் செய்தார்கள். இங்கு ஸ்ரீகாமாக்ஷீதேவியின் திவ்யாலத்தில் ஸ்ரீமத் பகவத்பாதர்களுடைய திவ்யமூர்த்தி ஸ்தாபனமுமேற்பட்டிருக்கிறது. ஆகவே எங்கும் நடப்பதைக் காட்டிலும் ஸ்ரீமதாசார்யர்களின் ஸித்தி க்ஷேத்திரத்தில் ஜயந்திநடைபெறுவதென்பது உத்தமத்திலும் உத்தமமென்பது சொல்லாமலே விளங்கும் இங்கு பிரதிவருடமும்போல் நடந்தேற வேண்டிய உத்ஸவத்தின் நிமித்தம் இவ்வருடம் தரிசித்துவரும்படி ஆக்ஞை அருளிய ஸ்ரீகாஞ்சிகாமகோடி பீடாதிபதி ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகளின் கருணைப்பிரவாகத்தைத் தலையில் வகித்து நான்போய் திவ்யதரிசனம்செய்து கிருதார்த்தனானேன் இங்கு வழக்கம்போல் 28—4—25 வைகாசி 16ம் தேதி ஆசார்யபகவத் பாதர்களின் அவதாரதினமாகிய பஞ்சமியன்று காலை $7\frac{1}{2}$ மணிக்கு ஸ்நானம் அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு ஸமஸ்த ஆஸ்திகர்களும் ஆலயத்தில் ஸ்ரீமதாசார்ய ஸன்னிதியையடைந்தனர். பிறகு விக்னேசுவரபூஜையை நடத்திப்பிரார்த்தனை செய்துகொண்டு ஸூத்திரபாஷ்யம் உபநிஷத் பாஷ்யம் கீதா பாஷ்யம் முதலிய திவ்ய கிரந்தங்களை அழகிய சிபிகையில் வைத்து அலங்கரித்து வேதகோஷ வாத்திய கோஷங்களுடன் வெளிப்பிரகாரப் பிரதக்ஷிணம் செய்துவந்து ஆசார்ய ஸன்னிதியிலிறங்கி நைவேதயம் தீபாராதனைகள் செய்ததின்பேரில் திவ்ய ஸன்னிதியில் பூர்வசாந்திசெய்து தக்ஷிணாமூர்த்தி அஷ்டகத்தால் யாவரும் ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்தனர். பிறகுரிக்யஜுஸ் ஸாமம் முதலிய வேதபாராயணத்திற்காக வரிக்கப்பெற்ற பெரியோர்கள் தங்கள் தங்கள் கூட்டங்களுடன் ஸன்னிதியிலேயே பாராயணாரம்பத்தைச் செய்துவிட்டுப் பிறகு அவர்களுக்கென்று

குறிப்பிடப்பட்ட விடங்களிலமர்ந்து பாராயணங்களை சிரத்தையுடன் துடங்கினர் இவ்விதம் உச்சிகாலம் நடக்கும்வரை பாராயணம் செய்யவாரம்பித்தனர் பிறகு ஸாயங்காலம் சுமார் மணி $5\frac{1}{2}$க்கே ஸ்ரீமத் பகவத்பாதமூர்த்தியை திவ்யாலங்காரம் செய்து எழுந்தருளச்செய்து காமாக்ஷியின் ஸன்னிதியிலமர்த்தி அங்கு ஒவ்வொருதினமும் ஸௌந்தர்யலகரியில் 10 சுலோகத்தைச் சரிவரச்சொல்லி ஒவ்வொரு சுலோகம் முடிந்ததும் ஸ்ரீமகாதேவிக்கு நிவேதனம்செய்து தீபாராதனையும் செய்தார்கள். இதைப்பார்த்ததும் ஸ்ரீமத் பகவத்பாதர்களே ஸ்துதிசெய்து அம்பாளை ஆராதிப்பதுபோல் தத்ரூபமாய்த்தோன்றும் வைபவத்தை ஆஸ்திகர்களுடன் நானும் தரிசிக்கும்படி ஆசார்ய கருணையை அடைந்தேனென்று அகமகிழ்ந்து ஆனந்தவாரிதியிலமிழ்ந்தேன். இவ்விதம் 10-வது சுலோகமான பிறகு ஸ்ரீதேவியின் பிரதக்ஷிணக்கிரமமாய் ஆசார்யமூர்த்தியை வெளியில் எழுந்தருளச்செய்து பிறகு மகாமண்டபத்திலமர்த்தினர் இதற்குள் சுமார் $6\frac{1}{2}$ மணி ஆகும் உடன் தீபாராதனை ஆனதும் யாவரும் திவ்யஸன்னிதியிலமர்ந்தனர். இவ்விதம் 10 தினங்கள் நடைபெற்றன. அதாவது முற்கூறியவாறு வைகாசிமாதம் 16ம் தேதி இவ்வருஷத்தில் ஸ்ரீமதாசார்யஜயந்தி ஏற்பட்டதால் அதுமுதல் 10 தினங்கள்முடிய பகவத்பாதரவர்களுக்கு பிர்மோத்ஸவம் நடைபெறுவது வழக்கம் அவ்விதமே நடந்தது இவ்வுத்ஸவத்தைச் சிலர் கர்ப்போத்ஸவமென்று நடத்த ஆரம்பித்து வைசாகசுத்த பஞ்சமீயன்று முடித்துவிடுகின்றனர்.

அவ்வாறு அனுஷ்டிப்பதைக் காட்டிலும் இதுதான் உத்தமோத்தமமென்று என் சிற்றறிவுக்கெட்டுகிறது. ஏனெனில் இக்காஞ்சி க்ஷேத்திரத்தில் வெகுகாலமாய் இவ்விதமேதான் நடைபெற்று வருகிறதென்று கூறுகின்றனர். இது ஒன்றே நமக்கு முக்கியப் பிரமாணமாகும். ஏனெனில் இங்கு நடக்கும் ஜயந்தீ மகோத்ஸவம் ஸ்ரீ மதாசார்யாளுக்கு அடுத்தபட்டம் முதற்கொண்டோ அல்லது பகவத்பாதாள் காலத்திலோ பக்தியுடன் ஆரம்பிக்கப்பட்டிருக்கவேண்டும்.

(தொடரும்)

எம். என். சுப்ரமண்யசாஸ்திரிகள்.